

Vol.24 | No. 1 | January 2020

The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்

## 2019 DECEMBER 28
## PRIESTLY ORDINATION,
## DN. SHIJO JOSE





## 2019 DECEMBER 1
## DIOCESAN BIBLE CONVENTION & INAUGURATION OF LAITY COMMITTEE
## SINAI RETREAT CENTRE, KALLUVILAI

## 2019 DECEMBER 14
## CHRISTMAS GATHERING
## SHENKOTTAI MISSION



## 2019 DECEMBER 15
## HOLY QURBANA & CHRISTMAS GATHERING
## MADURAI MISSION



## 2019 DECEMBER 16
## CHRISTMAS GATHERING MISSIONARIES, EXTENDED TERRITORIES, MADURAI



THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
VOLUME 24 No :01 JANUARY 2020



# இறையருள்
# IRAIARUL

உள்ளே...


| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| மறைக்கல்வி | 07 |
| இளையோர் இயக்கம் | 11 |
| மிஷன் லீக் | 14 |
| குழந்தை ஈசோ இயக்கம் | 16 |
| இல்வாழ்வு இயக்கம் | 17 |
| சமூக சேவை சங்கம் | 18 |
| வின்செந்தியர் சபை | 20 |
| அருட்சகோதரர்களிடமிருந்து | 21 |
| மறைவட்டச் செய்திகள் | 22 |
| மறைமாவட்ட செய்திகள் | 24 |
| Bishop's Engagements | 26 |


*Editorial Board*

Patron
His Excellency
**Mar George Rajendran SDB**
Chief Editor
**Fr. Joseph Santhosh**
Executive Editor
**Mr. Soundara Raj**
Associate Editors
**Fr. Thomas Sathianesan**
**Mr. Edwinson**
**Mr. Berlin Athencod**
Published by:
**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**
Designed by:
**Jesin**
Printed at
**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250833
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**REF. NO. PRIESTS/GR/102/2019** **31 DECEMBER 2019**

**DEAR AND REV. FATHERS,**

**GREETINGS FROM BISHOP'S HOUSE, THUCKALAY!**

As the year 2019 is ebbing away, we are entering the New Year 2020. Whenever we end a year and begin another year, we think of the wonderful gift of God, namely, time. Although God is above time, we are blessed with time with which we can grow, develop and become more humane and spiritual. While wishing you a prosperous and grace-filled New Year, let me remind you that we need to make good use of the precious gift of time that God has generously given to us.

On Friday, 22 November 2019, Pope Francis gave an address to the Priests, Religious, Seminarians and Catechists at St Peter's Parish, Bangkok, Thailand. I would like to summarise this address in this circular for our reflection. During his talk, the Holy Father expressed his profound gratitude to all those consecrated persons who, by their silent martyrdom of fidelity and daily commitment, have borne great fruit. Although they may not be able to appreciate or taste the fruits of their commitment, but without a doubt their lives are capable of bringing about much good. They are a promise of hope. Hence, the Holy Father wants those catechists and elderly consecrated men and women who drew us into the love and friendship of Jesus Christ to be always held in high esteem.

The Pope is of the opinion that the history of each of our vocations is marked by those people who helped us to discover and discern the fire of the Spirit. It is so good and at the same time important to be thankful. Gratitude is always a powerful weapon. Only if we are able to contemplate and feel genuine gratitude for all those ways we have experienced God's love, generosity, solidarity and trust,

as well as his forgiveness, patience, forbearance and compassion, will we allow the Spirit to grant us the freshness that can renew our life and mission. So the Pope invites us to think of those persons with gratitude, and, standing on their shoulders, we too may feel called to be men and women who help to bring about the new life the Lord bestows on us. As those called to apostolic fruitfulness have to struggle valiantly for the things that the Lord loves and for which he gave his life, let us ask for the grace for our hearts to beat in unison with his own. The Holy Father wants each one of us to be wounded by that same love in order to have that same passion for Jesus and for his kingdom.

At this juncture, the Holy Father says that we can all ask ourselves: how can we cultivate apostolic fruitfulness? This is a question that each of us can ask ourselves, and can answer from our hearts.

When people narrate their vocation stories, some say that the Lord first attracted them to himself by beauty. It could be the beauty of an image of Our Lady, whose special gaze pierced their hearts and made them want to know her better. Who is that woman? It had nothing to do with words, or abstract ideas or cold syllogisms. It all started with a look, a beautiful look at Mother Mary that captivated them. The Holy Father says that we must be alert to beauty, alert to a sense of wonder capable of opening up new horizons and raising new questions. A consecrated life incapable of openness to surprises is only half a life. A consecrated life incapable of openness to surprises each day - open to joy and to sadness, but open to surprises - is only half a life. The Lord does not call us and send us forth into the world to impose obligations on people, or to lay heavier burdens than those they already have, which are many, but rather to share joy, a beautiful, new, surprising horizon. The words of Benedict XVI are not only true but also prophetic for our times: "The Church does not grow by proselytizing but by attraction. Proclaiming Christ means showing that to believe in and to follow him is not only something right and true, but also something beautiful - lovely - capable of filling life with new splendour and profound joy, even in the midst of difficulties."

This means that we are not afraid to look for new symbols and images, for that particular music which can help awaken in each one of us the amazement that the Lord wants to give us. Let us not be afraid to continue inculturation of the Gospel. We need to seek new ways of transmitting the word, ways that are capable of mobilizing and awakening a desire to know the Lord. Who is that man? Who are these people who follow a man who was crucified?

It is a fact that for many people Christianity is a foreign faith, a religion for foreigners. This should spur us to find ways to profess the faith 'in dialect,' like a mother who sings lullabies to her child. With that same intimacy, we need to give faith a local face and flesh, which involves much more than making translations. It is about letting the Gospel be stripped of fine but foreign garb; to let it 'sing' with the native music of our land and inspire the hearts of our brothers and sisters with the same beauty that set our own hearts on fire. The Holy Father encourages us to pray to Our Lady, to the one who by the beauty of her gaze first captivated many of us. Let our prayer be: "Obtain for us now a new ardour born of the resurrection, that we may bring to all the Gospel of life which triumphs over death. Give us a holy courage to seek new paths, that the gift of unfading beauty may reach every man and woman."

Mary's gaze impels us to look where she looks, to turn our eyes to that other gaze and to do whatever her son tells us (Jn 2:1-12). His is a gaze that captivates because it is able to penetrate appearances to find and celebrate the authentic beauty present in every person. It is a gaze that, as the Gospel teaches us, shatters all determinisms, fatalisms and standards. Where many saw only a sinner, a blasphemer, a tax collector, an evildoer or even a traitor, Jesus was able to see apostles. Such is the beauty that his gaze invites us to proclaim, a gaze that enters in, transforms and brings out the best in others.

As for the first stirrings of our vocation, many of us in our early years took part in the activities of young people who wanted to put the Gospel into practice and to go out into the streets to visit the

needy, the neglected and even the despised, orphans and the elderly. Surely, many of us were in turn visited by the Lord, who made you see that he was calling you to give everything away, to leave ourselves behind and, in that very movement, to find ourselves. In the faces of those we encounter on the street, we can discover the beauty of being able to treat one another as brothers and sisters. We see them no longer as orphans, derelicts, outcasts or the despised. Now each of them has the face of a brother or sister redeemed by Jesus Christ. That is what it is to be a Christian! Can holiness somehow be understood apart from this lively recognition of the dignity of each human being? The Holy Father encourages all those who, on a daily basis, spend their lives serving Jesus in their brothers and sisters. So many of us are able to manage to see beauty where others see only contempt, or abandonment or an object of sexual gratification. In this way, we can become a concrete sign of the Lord's mercy, alive and at work: a sign of the anointing of the Holy One in our lands.

Such anointing calls for prayer. Apostolic fruitfulness requires and is sustained by fidelity to deep prayer. Deep prayer like that of those elderly people who constantly pray the rosary. How many of us have received the faith from our grandparents, from seeing them doing their household chores, rosary in hand, sanctifying their entire day. This is contemplation in action, making God part of the little things of each day. It is vital that the Church today be able to proclaim the Gospel to all, in all places, on all occasions, without hesitation and without fear; as a people who every morning, in their face to face conversation with the Lord, are sent forth anew. Without prayer, our life and mission loses all its meaning, loses strength and fervour. If you are missing out on prayer, any work you do will not make sense, will have no strength, no value. Prayer is the centre of everything.

Saint Paul VI said that one of the worst obstacles to evangelization is the lack of fervour. For religious, for priests and for catechists, that fervour is nurtured by a double encounter, with the face of the Lord and with the faces of their brothers and sisters. We too need

to find the space to be able to return to the source and drink of its life-giving waters. Immersed in myriad responsibilities, may we always seek that quiet place where we can remember, in prayer, that the Lord has already saved the world and that we are asked, in union with him, to make this salvation felt by all.

May these thoughts of Pope Francis on vocation and consecrate life become part of our lives and live our consecrated lives in a manner worthy of our master, whom we have promised to serve till the end of our lives!

## CONCLUSION

On the first day of the year, we celebrate the feast of Mary, Mother of God. It is indeed a wonderful opportunity for all of us to entrust ourselves to the maternal care and protection of Mary as we begin the New Year, a precious gift from God. Let us make good use of this year in order to become more Christ-like and to bring his message to as many people as possible so that the invocation that recite in the prayer Our Father may be realised: Thy kingdom come.

With my prayers and blessings,

Yours in Christ Jesus,

+ George Rajendran SDB

Bishop of Thuckalay

BISHOP GEORGE RAJENDRAN SDB
Diocese of Thuckalay



CATECHISM

# மறைக்கல்வி

> "கடவுளது சாயலாக படைக்கப்பட்ட புதிய மனிதருக்குரிய இயல்பை அணிந்து கொள்ளுங்கள். அவ்வியல்பு உண்மையான நீதியிலும் தூய்மையிலும் வெளிப்படும்"
> (எபே.4:24)

## அனைவருக்கும் இனிய கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

**விவிலிய கலைவிழா மறைவட்ட போட்டிகள்**

2019– 2020 ஆம் ஆண்டிற்கான விவிலியக் கலை விழா போட்டிகள் டிசம்பர் 26 வியாழக்கிழமை, ஆறுகாணி மற்றும் நித்திரவிளை, 27 வெள்ளிக்கிழமை மஞ் சாலுமூடு, சூசைபுரம், 30 திங்கள்கிழமை படந்தாலுமூடு மற்றும் தக்கலை பிலாங்காலை ஆகிய மறைவட்டங்களுக்கு நடத்தப்பட்டது. போட்டிகள் அனைத்தும் 9.30 மணி முதல் 4.30 மணி வரை 4 அரங்குகளில் நடைபெற்றது. நிறைவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டது. படந்தாலுமூடு மற்றும் தக்கலை பிலாங்காலை ஆகிய இடங்களில் நமது ஆயர் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் மாணவர்களின் ஒவ்வொரு நிகழ்வுகளையும் கண்டு அவர்களை உற்சாகப்படுத்தினர். கலை விழா போட்டிகள் சிறப்பாக நடைபெற ஒத்துழைத்த மறைவட்ட ஒருங்கிணைப்பாளர்களான அருட்தந்தையர்களான ஆன்றணி மாடப்புரைக்கல், ஜோமோன் மங்கலமடத்தில், ஜோஸ் வயலில், ஆன்றணி ஜோஸ், அனில் ராஜ், அஜின் ராஜ், ஆகியோர்களுக்கும் மறைவட்ட செயலரான அருட்சகோதரிகள் லீனா S.H,



அனுபவமா S.D, லின்ஸ் SABS, பாவனா FCC, அனு S.H, லிஸி மாத்யு S.H ஆகியோர்களுக்கும் இதயம் கனிந்த நன்றிகளை தெருவிக்கின்றோம். 2019– 2020 ஆம் ஆண்டின் விவிலியக் கலை விழா போட்டிகளில் மறைவட்ட வாரியாக முதல் மூன்று இடங்களை பிடித்த மறைகல்வி நிலையங்களின் பெயர்களும் பெற்ற புள்ளி விவரங்களும்.

## ARUKANI FORANE

| | | |
|---|---|---|
| 1st | St Thomas Church, Pathukani | 126 points |
| 2nd | Holy Family Church, Arukani | 124 points |
| 3rd | St Thomas Church, Netta | 108 Points |

## MANJALUMOODU FORANE

| | | |
|---|---|---|
| 1st | Little Flower Church, Manjalumoodu | 117 points |
| 2nd | Holy Cross Church, Malaicode | 75 points |
| 3rd | Holy Family Church, Mukkoottukal | 66 Points |

## NITHIRAVILAI FORANE

| | | |
|---|---|---|
| 1st | St Antony's Church, Vayalinkarai | 110 points |
| 2nd | Jayamatha Church, Nithiravilai | 109 points |
| 3rd | St Xavier's Church, Varuthattu | 88 Points |

## PADATHALUMOODU FORANE

| | | |
|---|---|---|
| 1st | Sacred Heart Church, Padanthalumoodu | 103 points |
| 2nd | St Martin De Pores, Kazhuvanthittai | 83 points |
| 3rd | St Mathew Church, Annikarai | 78 Points |

## THUCKALAY – PILANKALAI FORANE

| | | |
|---|---|---|
| 1st | St Michaels Church, Kattathurai | 116 points |
| 2nd | St Mary's Church, Thuckalay | 78 points |
| 3rd | St Little Flower Church, Pilankalai | 51 Points |

## SOOSAIPURAM FORANE

| | | |
|---|---|---|
| 1st | St Joseph Church, Soosaipuram | 140 points |
| 2nd | Christ the King Church, Palapallam | 118 points |
| 3rd | St James Church, Mankarai | 71 Points |

**கிறிஸ்மஸ் விழா**

மறைகல்வி தலைமையாசிரியர்களுக்கள், ஊக்குவிப்பாளர்கள், மறைகல்வி செயலர்கள் மற்றும் அலுவலக பணியாளர்களின் கிறிஸ்மஸ் விழா கூட்டமானது டிசம்பர் 14 சனிக்கிழமை பிறபகல் 2.30 மணிக்கு நற்செய்தி நிலையத்தில் வைத்து இயக்குநர் அருட்தந்தை பிரின்ஸ் மாலியில் தலைமையிலும் உதவி இயக்குநர் அருட்தந்தை ஸாஜன் நொட்டபொங்கு அவர்களின் முன்னிலையிலும் சிறப்பு விருந்தினராக பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துபறம்பில் அவர்களின் பிரசன்னத்திலும் கிறிஸ்மஸ் விழா கொண்டாடப்பட்டது. கூடுகையானது தூய ஆவிப்பாடலுடன் துவங்கி அருட்சகோதரி பிரீதா S.H அவர்களால் விவிலியம் வாசிக்கப்பட்டு செபமும் நடைபெற்றது. தலைமையாசிரியர் ஷோணிக் ரீகன் அனைவரையும் வரவேற்று பேசினர். சிறப்பு விருந்தினராக வருகை புரிந்த குருகுல முதல்வர் அவர்கள் கிறிஸ்மஸ் விழா கொண்டாடப்படும் இத்தருணத்தில் நாம் அனைவரும் உலகிற்கு ஒளியாக வந்த கிறிஸ்துவை நாமும் பின்பற்றி பிறருக்கும் பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்றும் உரையாற்றி கேக் வெட்டி கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரி-வித்தார். தொடர்ந்து மறைவட்ட கலை விழா போட்டிகள் பற்றி கலந்தாலோசிக்கப்பட்டது. நற்செய்தி நிலையத்தின் சார்பாக அனைவருக்கும் கிறிஸ்மஸ் பரிசாக டயரி மற்றும் பேனா இயக்குநர் அருட்தந்தையரால் வழங்கப்பட்டது. பின்னர் ஊக்குவிப்பாளர் திரு. மரியதாஸ் ஆசிரியரின் நன்றியுரையுடன் கூடுகையானது 4 மணியளவில் முடிவுற்றது. அனைவருக்கும் தேனீர் வழங்கப்பட்டது.

**மறைவட்ட செலர்களின் கூட்டம்**

மறைகல்வி செயலர்களின் கூட்டமானது டிசம்பர் 14 சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு இயக்குநர் அருட்தந்தை பிரின்ஸ் மாலியில் தலைமையில் ஆரம்பமானது. 6 மறைவட்டங்களிலுள்ள மறைவட்ட செயலரான அருட்சகோதரிகள் அனைவரும் பங்கு பெற்றனர். கூடுகையின் போது விவிலியக் கலை விழா போட்டிகள் மற்றும் போட்டிகள் நடைபெறும் அரங்குகள், நடைபெறும் போட்டிகள் பற்றி கலந்தாலோசிக்கப்பட்டது. பின்னர் போட்டிகளில் பங்கேற்கும் மாணவர்களின் பெயர்பட்டியல் மற்றும் போட்டிகளுக்கு தேவையான அனைத்தும் அந்தந்த மறைவட்ட செயலரிடம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் கூட்டமானது 12.30 மணியளவில் முடிவுற்றது.

**அருட்தந்தை பிரின்ஸ் மாலியில்**
**இயக்குநர்**

# மறைமாவட்ட நலம் விரும்பினோர் கிறிஸ்மஸ் கூட்டம்

மறைமாவட்ட நலம் விரும்பினோர் கிறிஸ்மஸ் கூட்டமானது 22-12-19 அன்று மதியம் 2 மணியளவில் ஆயர் மேதகு ஜார்ஜ் ராஜேந்திரன் ஆண்டகை தலைமையில் தூய ஆவிப்பாடலுடன் தொடங்கியது. மறைமாவட்ட மக்கள் தொடர்பு அதிகாரி பேரருட்தந்தை அன்றணி அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பசினார். தொடரந்து பிரதிநி-திகள் சார்பில் தக்கலை நண்பர்கள் இயக்க உறுப்பினர் பத்மானபுரம் திரு வினோத் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். அவர் தமது உரையில் 4 விதமான மனிதர்கள் உண்டு. அதில் பிறருக்காக வாழும் மா மனிதர்கள் தான் மறைமாவட்ட ஆயரும், குருக்களும் என்று கூறி மறைமாவட்ட செயல்பாடுகளில், பிறரன்பு பணிகள் எடுத்துக் கூறி வாழ்த்தினார். குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துபறம்பில் அவர்கள் 'நாம் அன்பினால் ஒன்றிணைந்து பிறருக்காக வாழ அழைக்கப்பட்டவர்கள். ஆகவே அவர்களோடு வாழ முயற்ச்சிப்போம்' என்று கூறினார். பிறகு கேக் வெட்டப்பட்டது. கிறிஸ்மஸ் வாழ்த்துப் பாடலும் பாடப்பட்டது.

மேதகு ஆயர் தமது செய்தியில், 'மக்கள் அன்று திருக்குழந்தையின் வருகைக்காக காத்திருந்தனர் என்று விவிலியத்தில் வாசிக்கிறோம். அவ்வேறே இன்று நாமும் காத்திருக்கிறோம். சீரோ மலபார்த் திருச்சபையின் திருத்தூதுப் பணியாளர்கள் குமரி மண்ணில் தங்கள் பணிளைத் தொடங்கி 60 ஆண்டுகள் நிறைவடையப் போகிறது. இதே வேளையில், தக்கலை மறைமாவட்டமும் இன்னும் ஈராண்டுகளில், தனது வெள்ளி விழாவைச் சிறப்பிகக்க இருக்கிறது. தக்கலை மறைமாவட்டத்தின் எல்லைகளும் விரிவாக்கப்பட்டு, திருத்தூதுப் பணிகள் தமிழகத்தின் பிற பகுதிகளில் விரிவாக்கப்பட்டுள்ளது. இவ்வளையில் உபகாரிகளாக இருக்கின்ற உங்களை வாழ்த்துவதோடு, உங்களது நற்பணி தொடர்ந்திட அன்புடன் கேட்கிறேன்' என்று ஆயர் தமது உரையில் கூறினார். மேலும் அனைவருக்கும் கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்தார். திரு எட்விட்சன் அனைவரையும் அறிமுகம் செய்து வைத்தார். பரைக்கோடு பங்கு மகளிரின் பாடல் இடம் பெற்றது. நிறைவாக திரு. சவுந்தரராஜ் அவர்கள் நன்றி கூறினார் அதன் பின் விருந்தோடு கூட்டம் நிறைவடைந்தது.

# தக்கலை கத்தோலிக்க இளைஞர் இயக்கம்

### தலைமத்துவ பயிற்சி

டிசம்பர் 3 கல்லுவிளை TCYM அலுவலகத்தில் தலைமைப் பண்பு குறித்தும், ஆளுமைத் தன்மையைக் குறித்தும்



பயிற்சி வழங்கப்பட்டது. மஞ்சாலுமூடு மறைவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜேம்ஸ் கானாகானில் அவருடைய தலைமையில் நடைபெற்றது. 100 க்கும் மேற்பட்ட இளையோர் கலந்துக் கொண்டனர்.

### அலகு சந்திப்பு

டிசம்பர் 15 அன்று ஆறுகாணி மறைவட்டத்தில் ஆறுகாணி மற்றும் நெட்டா அலகுகளும் தக்கலை பிலாங்காலை மறைவட்டத்தில் காட்டத்துறை அலகும் மறைமாவட்ட மற்றும் மறைவட்ட பொறுப்பாளர்களால் சந்திக்கப்பட்டது.

### மஞ்சாலுமூடு மறைமட்ட தியானம்

மஞ்சாலுமூடு மறைமட்டத்தின் சார்பில் கிறிஸ்மஸ் தாயாரிப்புக்காக 15-12-2019 அன்று மதியம் 2 மணி முதல் மாலை 5 மணி வரை தியானம் முழுக்கோடு புனித



தோமையார் ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. இந்த தியானத்தை சகோதரர்.டேவிட் (சென்னை) அவர்கள் வழிநடத்தினர்.

### கிறிஸ்மஸ் கொண்டாட்டம்

இளையோரின் கூட்டு முயற்சியை வலுப்படுத்தவும் ஆளுமையை வளர்க்கவும் மஞ்சாலுமூடு மறைவட்ட இளையோரால் தலைமையேற்று நடத்தப்பட்ட கிறிஸ்மஸ் விழா மற்றும் கரோல் போட்டி 21 -12 -19 அன்று தூய மிக்கேல் அதிதூதர் ஆலயம் தெற்றிவிளையில் நடைபெற்றது. இவ்விழாவில் மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமைதாங்கினர். சிறப்பு விருந்தினராக குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துபறம்பில் அவர்கள் இளையோர் இயக்குநர் பேரருட்தந்தை ஜோசப் சந்தோஷ் மஞ்சாலுமூடு மறைவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜேம்ஸ் கானாகானில் அவர்களும், Adv.

ஜெஸ்டினார் LLB, Adv.மிக்கேல் ராஜ் LLB , தக்கலை இளையோர் இயக்க தலைவர் செல்வன் ஜெஸின் மற்றும் மஞ்சாலுமூடு மறைவட்ட தலைவர் செல்வன் ஷாஜி அவர்களும் கலந்துக் கொண்டனர். கிறிஸ்மஸ் கரோல் போட்டியில் 18 குழுக்கள் கலந்துக் கொண்டு கிறிஸ்மஸ் விழாவை மேலும் அழகூட்டினர். முதல் பரிசு ரூ. 5001 மற்றும் சுழற்கோப்பையை பிலாங்காலை புனித குழந்தை தெரசா மறைவட்ட ஆலய இளையோர் பெற்றனர். 2 வது பரிசு ரூ. 3001 மற்றும் சுழற்கோப்பையை மஞ்சாலுமூடு புனித குழந்தை தெரசாள் ஆலய இளையோர் பெற்றனர். ரூ. 2001 மற்றும் சுழற்கோப்பையை களியல் ஆலய இளையோர் பெற்றனர். இவ்விழா வெற்றிப்பெற உழைத்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் என நன்றிநிறைந்த பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

**இளையோர் கலைவிழா**

இளைஞர்களின் கூட்டு முயற்சியை வலுப்படுத்தவும், ஆளுமையை வளர்க்கவும் Youth Fest 2020 கொண்டாடவிருக்கிறோம். இந்தபோட்டிகள் முதலில் மறைவட்ட அளவிலும், அதில் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அலகுக்கு மறைமாவட்ட அளவிலும் போட்டிகள் நடைப்பெறும். இதுநமக்கானவிழா...தோழமையை கொண்டாட அனைத்து இளைஞர்களும்இக்கலைவிழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்க அன்புடன் அழைக்கிறோம். மறைவட்ட, மறைமாவட்ட போட்டிகள் நடைபெறும் இடம் மற்றும் தேதி கீழே தரப்பட்டுள்ளது.

| மறைவட்டம் | இடம் | தேதி |
|---|---|---|
| சூசைபுரம் | சூசைபுரம் | 17.01.2020 |
| மஞ்சாலுமூடு | மஞ்சாலுமூடு | 18.01.2020 |
| நித்திரவிளை | கிறிஸ்துராஜபுரம் | 18.01.2020 |
| ஆறுகாணி | ஆறுகாணி | 19.01.2020 |
| படந்தாலுமூடு | படந்தாலுமூடு | 26.01.2020 |
| பிலாங்காலை | பிலாங்காலை | 01.02.2020 |

| மறைமாவட்ட போட்டிகள் நடைபெறும் இடம் மற்றும் தேதி | |
|---|---|
| சங்கமம், தக்கலை | 21.012.2020 |

**வீஜி,**
**செயலர்**

# ஆயர் இல்ல அயலாரோடு கிறிஸ்மஸ் கூடுகை

'உயிர்கள் உயிர் பெற உறவாடுவோம்' என்னும் மையசிந்தனையில் கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாட்டம் ஆயர் இல்ல அருகாமையில் வசிப்பவர்களோடு இணைந்து ஆயர் மேதகு ஜார்ஜ் ராஜேந்திரன் ஆண்டகை தலைமையில் 20 ம் தேதி அன்று நடைபெற்றது. குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துபறம்பில் அடிகளார் முன்னிலை வகுத்தார். CMC அருட்சகோதரிகளின் இறைவணக்கப் பாடலோடு தொடங்கிய கூட்டத்திற்கு அருட்தந்தை வினு டி ஜோசப் வரவேற்புரை நிகழ்த்தினர். செல்வி ஜின்ஸியின் குறுஞ் செய்தியும் அமலா காண்வென்ட் CMC அருட்சகோதரிகளின் கிறிஸ்து பிறப்பு விழா பாடலும் அருட்சகோதரி நிதுவின் கிறிஸ்மஸ் செய்தியும் இடம் பெற்றது. கடந்த ஆண்டின் செயல் அறிக்கையை சரிதா ஆல்பின் ஜோஸ் மற்றும் வரலாற்று பதிவுகளை திருமதி வினோலி அவர்களும் அவையில் பதிவு செய்தனர். வாழ்த்துரை வழங்கிய பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துபறம்பில் அவர்கள் அனைவரும் ஒரே இறைவனின் பிள்ளைகள் அனைத்து மதங்களும் அன்பையே போதிக்கின்றன. அன்புடையவர்களாக வாழ இக்கூட்டம் உதவட்டும். ஆயர் அவர்கள் மறைமாவட்ட பணிகள் குறித்தும் மறைமாவட்ட எல்லை விரிவாக்கம் குறித்தும் விரிவாகப் பேசினர். இந்த கிறிஸ்மஸ் விழா ஒரு பகிர்வின் விழா அந்த பகிர்வின் அடையாளமே இக்கூட்டம் உயிர்கள் உயிர் பெற உதவட்டும் எனக் கூறி வாழ்த்தினார். நெட்டா காப்பக மாணவிகளின் கிறிஸ்து பிறப்பு நாடகம் நடைபெற்றதோடு விருந்தினர் அறிமுகமும் கேக் வெட்டும் நிகழ்வும், நினைவு பரிசு வழங்குதலும் நடைபெற்றது. நிறைவாக அன்பின் விருந்தோடு கூடுகை நிறைவு கண்டது. நிகழ்விற்கான ஏற்பாடுகளை அருட்தந்தை சஜி எலம்பாசேரில் SDB அவர்கள் தலைமையிலான குழு ஒன்று செய்திருந்தது.

வி. எட்விட்சன், செயலர்

சிறுமலர் MISSION LEAGUE 

# மிஷன்லீக் இயக்கம்

**மிஷன் லீக் இயக்க பொறுப்பாளர் கூட்டம்**

17 ம் தேதி அன்று மாலை 3.30 மணிக்கு மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் செபத்துடன் ஆரம்பமானது குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துபறம்பில் அவர்கள் உடனிருந்தார். முதலில் அக்கோடபர் மாதம் நடைபெற்ற விசுவாச நடை பயணம் பற்றி கருத்துக்கள் பகிரப்பட்டன. பின்பு சீரோ மலபார் திருச்சபையின் திருத்தொண்டு வாரம் எவ்வாறு கொண்டாடப்படுவது என்பது பற்றி கலந்தாலேசிக்கப்பட்டது.

1. இந்தியா என்ற மறைபரப்புத் தளத்தில் ஊன்றப்பட்ட ஒரு விதையே தக்கலை மறைமாவட்டம். அதில் துளிர்விட்டதே விரிவாக்கப்பட்ட மறைபரப்புத் தளங்கள் அவற்றின் வளர்ச்சிக்காக உழைத்தல் அதற்காக சிறப்பக் காணிக்கைகள் சேகரித்து உதவுதல்.
2. மேஜர் ஆர்ச் பிஷப் கூறும் கருத்துக்களை நாம் பின்பற்றுதல் வேண்டும்.
3. ஜனவரி 6 முதல் 12 ம் தேதி வரை திருத்தொண்டு வாரமாக கொண்டாடுதல் 2 அல்லது 3 நாட்கள் சிறப்பாக கொண்டாடுதல் வேண்டும்.
4. அந்நாட்களில் Group Work கொடுத்து அந்தந்த பங்குகளில் வகுப்புகள் நடத்துதல்
5. மறைமாவட்டத்திலுள்ள மிஷன் தளங்களின் பட்டியல் தயாரித்து அவற்றின் வரலாறு எழுதுதல் அவற்றிற்காக செபித்தல், அதற்கான செயல்திட்டங்களை ஒன்று தயார் செய்தல்.
6. மறைமாவட்ட மிஷனறீஸ் பற்றி அறிதல் அவர்களை சந்தித்து அவர்களுக்காக செபித்தல்.
7. வரைபடம் வரைந்து வரலாறு எழுதி புகைப்படம் ஒட்டுதல்
8. 12 ம் தேதி சிறப்புக்காணிக்க எடுத்து மிஷன் தளங்களில் உதவுதல்.
9. சிறப்பாக செய்யும் மிஷன் லீக் இயக்கத்திற்கு பரிசுகள் வழங்கி சிறப்பித்தல்.

மேலும் இறையழைத்தலை ஊக்கப்படுத்த அதற்கான சிறப்பு பயிற்சிகளும் வகுப்புகளும் நடத்துதல், தானாக செபிக்கும் பழக்கத்தை உருவாக்குதல் போன்ற பல செயல்பாடுகளும் கலந்தாலோசிக்கப்பட்டது. ஆயர் அவர்களின் இறுதி ஆசீருடன் கூட்டம் நிறைவடைந்து.

**பொறுப்பாளர் கூட்டம்**

21-12-19 அன்று மதியம் 3 மணிக்கு கல்லுவிளை மிஷன் லீக் நடுநிலையத்தில் வைத்து

பொறுப்பாளர் கூட்டம் நடந்தது. இயக்குநர் தந்தை அவர்களின் செபத்துடன் ஆரம்பமானது. தந்தை அவர்கள் அனைவரையும் வரவேற்று பேசினர். தொடர்ந்து மறைமாவட்ட ஜீபிலி சம்மந்தமாக நமது செயல்பாடுகள் பற்றி கலந்தாலோசிக்கப்பட்டது.

**தீர்மானங்கள்**

"ஆழத்தில் வலை போடுங்கள்" என்ற மையசிந்தனையின் அடிப்படையில் இறையழைத்தல் கருத்தரங்குகள் குருமடம் மற்றும் கன்னியர் இல்லங்களில் நடத்துதல். மாணவர்களுக்கு இறையழைத்தலை பற்றிய நற்சிந்தனைகள் எடுத்துக்கூறி ஊக்கப்படுத்துதல்.

**தொடர் விவிலிய வாசகம்**

எல்லா குழந்தைகளுக்கும் முழு விவிலியமும் தொடக்க நூல் முதல் வாசிக்க வைத்தல்

**மறைபரப்புத் தளங்கள் பார்வையிடல்**

குறிப்பிட்ட மாணவர்களைத் தேர்வு செய்து திருத்தொண்டு பயணம் செல்லுதல். விழிப்புணர்வு வகுப்புகள் நடத்தி ஊக்கப்படுத்துதல். பிறருக்கு உதவும் மனநிலையை உருவாக்குவதற்காக ஒரு சிறு சேமிப்புத் திட்டம் ஏற்படுத்தி 2020 ம் ஆண்டிற்கான நாலிக்கு முன்பாக காசு திருப்பித் தருதல் அன்றைய தினம் உதவித் தொகை வழங்குதல். முதியோர்இல்லம்சந்தித்து ஒருநாள் அவர்களோடு செலவிடுதல். குருக்கள், துறவிகளுக்காக செபித்தல், குலுக்கல் Fund Collect செய்தல், திருத்தொண்டு வாரம் சிறப்பாக கொண்டாடுதல்.

மேலும் சிறுமலர் இதழின் வளர்ச்சிக்காக எல்லோரும் உழைத்தல். மாணவர்களின் படைப்பாற்றலை மேம்படுத்துதல், மறைமாவட்டத்திற்கு பொறுப்புகள் ஒப்படைத்தல். 2020 பிப்ரவரி முதல் 2021 மார்ச் முடிய போன்ற பல தீர்மானங்கள் தீர்மானிக்கப்பட்டது. கிறிஸ்து பிறப்பு விழாவுக்கு ஆயத்தமாக அனைவருக்கும் வாழ்த்துச் சொல்லி இனிப்புகள் பரிமாறப்பட்டன. பின் செயலர் நன்றி கூற இறுதி செபத்துடன் விழா நிறைவடைந்தது.

**அருட்தந்தை அலைக்ஸ் புத்தேட்,**
**இயக்குநர்**

# மறைமாவட்ட பைபிள் கன்வேன்ஷன்

2019 நவம்பர் 29–30 மற்றும் டிசம்பர் 1 கல்லுவலையில் மூன்று நாள் மறைமாவட்ட பைபிள் கன்வேன்ஷன் நடைபெற்றது. தஞ்சாவூர் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை ஜோசப், தனது குழுவுடன் சேர்ந்து வழிநடத்தினார். நமது பெரும்பாலான ஆலயங்களில் இருந்து எவிசுவாசிகள் மூன்று நாள் கன்வேன்ஷனில் கலந்து கொண்டனர். கன்வேன்ஷனில் பல அருட்தந்தையர்கள் மற்றும் அருட்சகோதரிகள் தங்கள் ஜெபத்துடன் சேர்ந்து பார்த்தது மகிழ்ச்சியாக இருந்தது. இந்த நிகழ்வை உத்தமமான திட்டமிடலுடன் ஏற்பாடு செய்த குழுவுக்கு நன்றிகள்.

HOLY CHILDHOOD
குழந்தை ஈசோ

# குழந்தை ஈசோ இயக்கம்

"சிறு பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள் அவர்களை தடுக்காதீர்கள். ஏனெனில் இறையாட்சி இத்தகையோருக்கு உரியது. லூக்கா 8 ; 16

**குழந்தைகளுக்கான சிறப்பு தியானம்**

குழந்தைகளுக்கான சிறப்பு தியானம் 31-12-10, 1-1-2020 ஆகிய இரண்டு நாட்களும் கல்லுவிளையில் நடைபெற்றது. தூய ஆவிப் பாடல் பாடப்பட்டது. அதன் பின்னர் விவிலியம் வாசிக்கப்பட்டது. தொடர்ந்து



மறைமாவட்ட குருகுலமுதல்வர் குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துபறம்பில் அவர்கள் தொடக்கவுரை ஆற்றினார். தியானம் இரு பிரிவாக நடத்தப்பட்டது. பாலர் முதல் 4ம் வகுப்பு வரை Sr. Soona CMC அவர்களும் 5ம் வகுப்பு முதல் 10 வகுப்பு வரை அருட்தந்தையர்கள் அருட்சகோதரிகளின் தலைமையிலும் நடைபெற்றது. இந்த இரண்டு நாட்களும் அருட்தந்தையர்கள் திருப்பலி ஒப்புக்கொடுத்தனர். தியான இடையில் செய்கை பாடல்களும் இறைவார்த்தைப் பாடல்களும் பயிற்றுவிக்கப்பட்டது.

**வகுப்புகள்.**

Sr.Kiruba (தேவ அன்பு, நற்கருணை) Sr.Nithu (காவல்தூதர்கள்) Sr.Blessy (இறைபுகழ்ச்சி தேவவசனம்) Sr. Jermi (இறைஅன்பு பிறருக்கு உதவுதல்) ஆகிய தலைப்புகளில் குழந்தைகள் மனதில் பதியும்வண்ணம்வகுப்புகள் நடத்தப்பட்டது. இறுதியில் அருட்தந்தையர்கள் கைவைத்தல் ஆசீர்வாத வழிபாட்டுடன் தியானம் நிறைவடைந்தது. இத்தியானத்தில் ஏராளமான குழந்தைகள் பங்கு கொண்டு இறை ஆசீர் பெற்றனர். இதற்காக ஒத்துழைத்த அருட்தந்தையர்கள் அருட்சகோதரிகள் அனைவருக்கும் நன்றி.

**அருட்தந்தை ஜோமோன் மங்கலமடம்**

**இயக்குநர்**



FAMILY APOSTOLATE
குடும்ப நல்வாழ்வு

# இல்வாழ்வு இயக்கம்

**குடும்ப நல வாழ்வு மற்றும் மது அடிமைகள் மறுவாழ்வு மையம்**

கல்லுவிளை மது அடிமைகள் மறுவாழ்வு மையத்தில் மது அடிமைகள் மற்றும் மனநோயளிகளுக்கான சிகிட்சையும் ஆற்றுப்படுத்தலும் நடைபெற்று வருகின்றன. இம்மையத்தில் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய 3 நாட்களும் மது அடிமைகள் மற்றும் மனநோயாளிகளுக்கான சிகிட்சையும் ஆற்றுப்படுத்தலும் நடைபெற்று வருகின்றன. முதல் மற்றும் மூன்றாவது திங்கட்கிழமைகளில் மதியம் 12.30 மணிக்கு மனநல மருத்துவர் வருகை புரிவார். இந்நாளில் மருத்துவரிடம் ஆலோசனை பெற்றுக் கொள்ளலாம். இம்மையத்திலிருந்து 800 க்கும் மேற்பட்ட மது நோயாளிகளும் மன நோயாளிகளும் சிகிட்சை பெற்று நலமடைந்துள்ளனர்.

**திருமண பயிற்சி வகுப்பு**

திருமண பயிற்சி வகுப்பு இரு மாதத்திற்கு ஒரு முறை 3 நாட்கள் நடைபெறும். டிசம்பர் மாதம் 13, 14, 15 ஆகிய 3 பயிற்சி நடைபெற்றது. இப்ப-யிற்சியில் தனித்திறன் பெற்ற அருட்தந்தையர்கள் மருத்துவர்கள் மற்றும் ஆசிரியர்களால் வகுப்பு நடத்தப்படுகின்றது. நிறைவு நாளான ஞாயிறு மதியம் 2 மணிக்கு நடைபெற்ற பெற்றோர்களுக்கான பயிற்சியில் கல்லுவிளையில் வருகை புரியும் மனநல மருத்துவரால் வகுப்பு நடத்தப்பட்டது. பயிற்சி கட்டணம் ரூபாய் 750 ஆகும். இடம் தக்கலை சங்கமம்.

**அருட்தந்தை அஜீஷ்**
**இயக்குநர்**

## சிரோ-மலபார் ஆயர் பேரவை

ஜனவரி 7 முதல் 15 வரை காக்கநாடு செயின்ட் தாமஸ் மவுண்டில் நடைபெறும் ஆயர் பேரவை வெற்றிக்காகவும், சிரோ–மலபார் திருச்சபையின் நன்மைக்காகக்காகவும் அருட்தந்தையர்கள் மற்றும் பங்கு மக்களின் ஜெபங்களை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

Kanyakumari Social Service Society

# கன்னியாகுமரி சமூக சேவை சங்கம்

**Educare கிறிஸ்துமஸ்**

தக்கலை மறைமாவட்டத்திலுள்ள ஏழை மாணவர்கள் பயன்பெறும் வகையில் கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் கீழ் Educare என்ற அலகு உள்ளது. இதில் சுமார் 200 மேற்பட்ட



மணவர்கள் உள்ளனர். இந்த மாணவர்களின் கிறிஸ்துமஸ் விழா KKSSS அரங்கத்தில் வைத்து டிசம்பர் 14 தேதி நடைபெற்றது.

**தன்னலமற்ற பணி**

Educare கிறிஸ்துமஸ் விழாவானது மதிப்புக்குரிய குருகுல முதல்வர் பேரருட்தந்தை தாமஸ் பவ்வத்துபறம்பில் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக பெதனி கல்வி நிறுவனங்களின் தாளாளர் அருட்தந்தை ஜாண் கிறிஸ்டோபர் அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றும் போது சாதி மத வேற்றுமைகளை தாண்டி உலகம் முழுவதும் கிறிஸ்துமஸ் விழா அனைவராலும் கொண்டாடப்பட்டு வருகிறது. மார்கழி பெற்றெடுத்த புண்ணிய நாள் தான் கிறிஸ்து பிறப்புப் பெருவிழா என்றார்.

கிறிஸ்துமஸ் காலங்களில் நாம் இன்றும் கற்பனையில் பெத்லேகேம் போகிறோம் ஆனால் கிறிஸ்துமஸ் என்பது பெத்லேகேம் போவதில் இல்லை அடுத்து இருப்பவருக்கு உதவி செய்வதிலே உள்ளது அதைத்தான் இந்நிறுவனம் செய்து வருகிறது என கூறினார். நிகழ்வுக்கு இடையிடையே மாணவர்களின் கலைநிகழ்வுகள் நடைபெற்றன. கன்னியாகுமரி சமூக சேவை சங்க இயக்குனர் தந்தை சஜி எலம்பசேரி அவர்கள் வாழ்த்துரை வழங்கினர்கள். கன்னியாகுமாரி சமூக சேவை சங்க துணை இயக்குநர் அருட்தந்தை தாமஸ் பூவத்துமூட்டில் மற்றும் மாணவர்கள் பெற்றோர்கள் அலுவலக பணியாளர்கள் என ஏராளமனோர் கலந்துகொண்டனர்.

**KKSSS கிறிஸ்துமஸ்**

கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் பணியாளர்களின் கிறிஸ்மஸ் கொண்டாட்டம் டிசம்பர் 23 தேதி KKSSS வளகத்தில் நடைபெற்றது இதில்



பணியாளர்களின் கலைநிகழ்வு வெள்ளை, நீலம், மஞ்சள் என மூன்று குழுக்களாக பிரித்து வாழ்த்து அட்டை தயாரித்தல், பரிசுபொட்டி வடிவமைத்தல் மற்றும் கிறிஸ்துமஸ் பாடல் ஆகிய போட்டிகள் நடைபெற்றது அதனை தொடர்ந்து கிறிஸ்துமஸ் விழா நடைபெற்றது கிறிஸ்துமஸ் விழாவானது KKSSS இயக்குநர் தந்தை சஜி எலம்பசேரி தலைமையில் நடைபெற்றது

**தீவனத்தொட்டியில் இயேசு**

சிறப்பு விருந்தினராக மார்த்தாண்டம் C.S.I சபை போதகர் ஜோண் ராஜா கலந்து கொண்டு கிறிஸ்துமஸ் உரையாற்றும் போது உலக மீட்பர் இயேசுவுக்கு கிடைத்தது தீவனத்தொட்டி, கந்தை துணி, முதலில் தரிசித்தவர்கள் மேய்ப்பர்கள் இவர் ஏழைகளுக்குக் காட்சியளிப்பவராய், ஏழ்மையின் கோலமாய், தாழ்மையின் வடிவில் இயேசு கிறிஸ்து பிறந்தார். என்பதை அறிந்து கொள்ள முடிகிறது இயேசுவின் தாழ்மை இன்று நம் அனைவரையும் ஆதிக்க, ஆடம்பர வாழ்விலிருந்து மாற்றம் பெற்று அனைத்து ஏழை எளிய மக்களோடு ஒன்றித்து வாழ விடுக்கிறது. இல்லாத மக்களோடு பகிர்ந்து வாழும் போது தான் உண்மையான தாழ்மை உருவாக்கும். பிறருக்குப் பகிர்ந்து வாழும்போது தினமும் கிறிஸ்துமஸ் நாளாக அமையும். இந்த வாழ்வே இம்மண்ணில் நமக்கு முழுமையான மகிழ்ச்சியையும் சமாதானத்தையும் அருளச்செய்யும் என கூறினார். kksss இனை இயக்குநர் தந்தை தாமஸ் பூவத்துமுட்டில் அவர்கள் வாழ்த்துரை வழங்கினர்கள் இடையிடையே பணியாளர்களின் கலைநிகழ்வுகள் நடைபெற்றன. இதில் கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் பணியாளர்கள் அலுவலக நண்பர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.




## தக்கலை மத்திய சபை

**புனித வின்செண்ட் தே பவுல் சபை**

**பிலாங்காலை வட்டார சபை**

பிலாங்காலை புனித குழந்தை தெரசாள் பெண்கள் கிளைச்சபை மற்றும் பிலாங்காலை மேரி இளையோர் பெண்கள் கிளைச்சபைகள் இணைந்து 22 ம் தேதி அன்று பிலாங்காலை புனித குழந்தை தெரசாள் ஆலய வளாகத்தில் வைத்து கிறிஸ்மஸ் விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் கிளைச்சபை உறுப்பினர்கள் மற்றும் தத்து குடும்ப உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். விழாவிற்கு மத்தியசபையின் பெண்கள் பிரதிநிதி அமலமேரி அவர்கள்தலைமை தாங்கி செய்தியும் வழங்கினர்.விழாவில் கிறிஸ்மஸ் கேக் வெட்டப்பட்டது. தத்து குடும்பங்களுக்கு சிறு உதவியும் வழங்கப்பட்டது. விழாவின் இடையில் கிளைச்சபை உறுப்பினர்கள் கலைவிகழ்ச்சிகள் நடத்தப்பட்டனர். பின்னர் மாலை 5 மணிக்கு விழாவானது இனிதே நிறைவடைந்தது. விழாவிற்கு கலந்து கொள்ள முடியாத இருந்த அனைத்து வீடுகளில் சென்று இனிப்பும் உதவித்தொகையும் வழங்கப்பட்டது

| 2020, ஜனவரி மாத முக்கிய நிகழ்வுகள் | |
|---|---|
| 6 | TNBC குழு கூட்டம் |
| 7-15 | சீரோ மலபார் ஆயர் பேரவை |
| 11-12 | சீரோ மலபார் திருதொண்டு வாரம் |
| 16 | SABS கன்னியர் இல்லம் அர்ச்சிப்பு, மதுரை |
| 18 | சிறப்பு அருட்தந்தையர்கள் கூட்டம் |
| 19 | களியல் மறைவட்ட ஆலயம் துவக்கவிழா |
| 20-22 | தமிழ்நாடு ஆயர் பேரவை, சங்கமம் |

## அருட்சகோதரர்களிடமிருந்து...




அனைவருக்கும் கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துகள். பல்வேறு இடங்களில் படிக்கும் நமது அருட்சகோதர்கள் கிறிஸ்மஸ் விடுமுறைக்காக வீடுகளுக்கு வந்திருந்தனர். அருட்சகோதரர்களின் கிறிஸ்மஸ் கூட்டமானது 23-12-2019 அன்று நடைப்பெற்றது. ஆயர் அவரகள் இக்கூட்டத்திற்கு தலைமை ஏற்று கிறிஸ்மஸ் செய்தி வழங்கினார்.

அருட்தந்தை ஷிஜோ ஜக்கரகுந்நேல் அவர்களின் திருப்பட்ட நிகழ்வு 28-12-2019 அன்று நடைப்பெற்றது. அவர்களுக்கு அருட்சகோதரர்களின் அன்பு வாழ்த்துகள். அருட்சகோதரர்கள் அனைவரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

மறைமாவட்ட மறைக்கல்வி கலைப் போட்டிகளுக்கு மதிப்பீடு வழங்க அருட்சகோதரர்கள் உதவினர். அவர்களுக்கு நன்றி

அருட்சகோதரர்கள் அனைவரும் கிறிஸ்மஸ் விடுமுறை முடிந்து 05-01-2020 அன்று குருத்துவ கல்லூரிகளுக்கு திரும்பிச் செல்வார்கள்.

விடுமுறை காலத்தில் பல்வேறு வகைகளில் உதவிய ஆயர், இளங்குருமட அதிபர் தந்தை, மற்றும் அருட்தந்தையர்களுக்கு எங்கள் இதயம் கனிந்த நன்றிகள்.

**தலைவர்**
**அருட்சகோதரர். ஜோஸ்**
**புரயிடத்துகுந்நேல்**

## அருட்தந்தை தாமஸ் தெக்கேலின் நினைவு நாள்

அருட்தந்தை தாமஸின் ஆறாவது நினைவு நாள் 2019 டிசம்பர் 14 அன்று மாங்குளத்தில் நினைவுகூரப்பட்டது. பிரின்டோ குரியாஸ் தலைமையில் திருப்பலி நிறவேற்றப்பட்டது. அருட்தந்தை தாமஸ் தெக்கேலின் கல்லறையில் இறந்தவர்களுக்கான ஜெபமும் செய்தனர். அருட்தந்தை தாமஸ் தெக்கேலின் ஆத்மாவை நினைவில் வைத்துக் கொள்வோம், அவருடைய நித்திய ஜீவனுக்காக ஜெபிப்போம்.

# மறைவட்ட செய்திகள்




## சூசைபுரம் மறைவட்டம்

### சூசைபுரம் - புனித சூசைப்பர் ஆலயம்

02-12-2019 முதல் 22-12-2019 வரை கிறிஸ்து பிறப்பு விழாவினை முன்னிட்டு பஜனை நடைபெற்றது. 13-12 2019 அன்று தியானம், பாவசங்கீர்த்தனம் ஆராதனையும்நடைபெற்றது. 22-12-19 அன்று கருங்கல், கிறிஸ்தவ வட்டார ஐக்கியப்பேரவை சார்பாக மக்களுக்கு நல உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டது. 24-12-2019 அன்று வின்சென்ட் - தே - பவுல் சபை சார்பாக 30 குடும்பங்களுக்கு உதவித்தொகைகளும் பொருளுதவிகளும் வழங்கப்பட்டது. 24-12-19 அன்று 11.30 மணிக்கு கிறிஸ்து பிறப்பு விழா திருப்பலியும் அதனை தொடர்ந்து மக்களின் பாடல் போட்டிகளும், கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றது. இறுதியில் அனைவரும் இணைந்து கேக் வெட்டி கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

### பிலாங்கரை புனித லொரேட்டா அன்னை ஆலயம்

20-12-2019 அன்று வெள்ளிக்கிழமை கிறிஸ்து பிறப்பு விழா ஆயத்த பாவசங்கீர்த்தனம் நடைபெற்றது. 24-12-19 அன்று வீடுகள் சந்தித்து படுக்கை நோயாளிகளுக்கு நற்கருணை வழங்கப்பட்டது. வின்சென்ட-தே-பவுல் சபை சார்பாக பங்கு தந்தையோடு இணைந்து 12 வீடுகள் சந்தித்து உதவித்தொகையும், புத்தாடைகள் மற்றும் பொருட்களும் வழங்கப்பட்டது. கிறிஸ்து பிறப்பு விழா சிறப்பு திருப்பலி 10.30 மணிக்கு நடைபெற்றது. இறுதியில் அனைவரும் இணைந்து கேக் வெட்டி கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

### கிள்ளியூர் புனித தேவமாதா ஆலயம்

கிறிஸ்து பிறப்பு விழாவினை முன்னிட்டு பஜனை பாவசங்கீர்த்தனம் நடைபெற்றது. வின்சென்ட-தே-பவுல் சபை சார்பாக பங்கு தந்தையோடு இணைந்து வீடுகள் சந்தித்து உதவித்தொகையும், புத்தாடைகள் மற்றும் பொருட்களும் வழங்கப்பட்டது. 24-12-19 அன்று இரவு 10 மணிக்கு ஆராதனையும் சிறப்பு திருப்பலியும் நடைபெற்றது. இறுதியில் அனைவரும் கேக் வெட்டி கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

### பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் ஆலயம்

8-12 19 அன்று ஞாயிற்றுக்கிழமை மறைகல்வியின் பெற்றோர் ஆசிரியர் கூட்டம் நடைபெற்றது. 14-12-19 சனிக்கிழமை ஒருநாள் தியானமும் ஒப்புரவு வழிபாடும் நடைபெற்றது. 15-12-19 ஞா-யிற்றுக்கிழமை மறைகல்வி மாணவ மாணவியருக்கான ஒப்புரவு வழிபாடு நடைபெற்றது. பங்கின் சார்பில் 10 நாட்கள் பஜனை நடைபெற்றது. 25 நோன்பு பங்கு மக்கள் சிறப்பாக கடைபிடித்தனர். 25 நாட்களும் சுமார் 100 பேருக்கும் அதிகமானோர் திருப்பலியில் பங்கெடுத்தனர். தினம் ஒரு விவிலிய வசனம் மனப்பாடம் செய்யப்பட்டு இறுதி நாளில் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டது. அத்துடன் கிறிஸ்மஸ் ஸ்டார் செய்யும் போட்டியும் நடைபெற்றது. கிறிஸ்மஸ் திருப்பலி 24 அன்று இரவு 11 மணிக்கு தொடங்கியது. நிறைவாக குடில் திறப்புவிழா பவனி கிறிஸ்மஸ் கேக் வெட்டும் நிகழ்வு கிறிஸ்மஸ் மரம் குழந்தை ஈசோ இயக்கத்தின் சார்பில் நடப்பட்டது. வின்சென்ட-தே-பவுல் சபை சார்பாக பங்கு தந்தையோடு இணைந்து வீடுகள் சந்தித்து ஏழைகளுக்கு உதவித்தொகையும், கேக் மற்றும் பரிசுப்பொருட்களும் வழங்கப்பட்டது.

**தக்காளிவிளை திருகுடும்ப ஆலயம்**

24 ம் தேதி 7.30 மணிக்கு கிறிஸ்மஸ் திருப்பலி நடைபெற்றது. அனைத்து வீடுகளில் இருந்தும் கேக் கொண்டுவரப்பட்டு கேக் வெட்டி கிறிஸ்மஸ் விழாவினை மகிழ்ச்சிகரமாக கொண்டாடப்பட்டது. மீதமுள்ள கேக்கை லேலம் போடும் நிகழ்வும் நடைபெற்றது.

## நித்திரவிளை மறைவட்டம்

நித்திரவிளை மறைவட்டத்திற்குட்பட்ட அனைத்து பங்குகளிலும் கிறிஸ்து பிறப்பு விழா சிறப்பு திருப்பலியும் புத்தாண்டிற்கான சிறப்பு திருப்பலியும் நற்கருணை ஆராதனையும் நடைபெற்றது. இவ்விழாவுக்கு ஆயத்தமாக ஒப்புரவு வழிபாடும் நடைபெற்றது. நித்திரவிளை பங்கில் 8-12-19 அன்று மதியம் 2.30 மணியளவில் வட்டாரசபை கூட்டமும் கிறிஸ்மஸ் விழாவும் நடைபெற்றது. மறைவட்ட ஆன்மீக இயக்குநர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் தலைமையேற்று வாழ்த்து செய்தி அளித்து கிறிஸ்மஸ் கேக் முறித்து மகிழ்ச்சியை பகிர்ந்தனர். முன்னாள் வட்டார சபை தலைவர் சகோ. வின்சென்ட் ராஜ் அவர்கள் கிறிஸ்மஸ் வாழ்த்து செய்தி வழங்கினர். பின் அனைவருக்கும் இனிப்பு வழங்கி இறுதி செபத்துடன் கூட்டமானது முடிவுற்றது.

தகவல்: திருமதி ஸ்னேக லதா | திருமதி ஹேமா

# மறைமாவட்டச் செய்திகள்

## தென்காசியில் புதிய மிஷன்

அமலாமாதா மிஷன் என்ற புதிய மிஷன் தென்காசி ரயில் நிலையத்திற்கு அருகில் 8 டிசம்பர் 2019 அன்று தொடங்கப்பட்டது. அருட்தந்தை. தாமஸ் தக்கலை இந்த மையத்தை சில உள்ளூர் விசுவாசிகளின் உதவியுடன் தொடங்க முன்முயற்சி எடுத்தார். திருப்பலிக்கு சுமார் 80 பேர் கலந்து கொண்டனர். ஏராளமான அருட்தந்தையர்கள் மற்றும் அருட்சகோதரிகளும் கலந்து கொண்டனர். மிஷன் திறப்பதற்கு முன்பு, அருட்தந்தை தாமஸ் தக்கலை ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை மாலை ஐந்து குடும்பங்களுக்காக திருப்பலி நிறைவேறி வந்தார். வட்டக்கோட்டையைச் சேர்ந்த அருட்சகோதரி. எஸ்.ஆர். மேரி கோடியன் இந்த மிஷனில் மருத்துவ சேவைகளை வழங்குவார். இச்சேவைகள் மூலம் அப்பகுதியின் மக்கள் இயேசுவின் இரக்கத்தையும் அன்பையும் அனுபவிப்பார்கள். இத்திருத்தூது நிலையத்திற்காக நாம் செபிப்போம்.

## தமிழக ஆயர்களால் ஜூபிலி திருப்பலி

ஜனவரி 21 அன்று அனைத்து தமிழக ஆயர்களும் மாலை 5.30 மணிக்கு நாகர்கோயில் புனித அல்போன்சா ஆலயத்தில் நடைப்பெறுகின்ற திருப்பலியில் பங்கேற்பார்கள். இந்த நிகழ்வை உங்கள் அந்தந்த ஆலயங்களில் முன்கூட்டியே அறிவித்து, அந்தந்த ஆலயங்களிலிருந்து மக்களை அழைத்து வருவதற்கான திட்டங்களை உருவாக்கவும். நமது சிரோ-மலபார் வழிபாட்டு முறையை திருப்பலியில் பிற தமிழக ஆயர்களும் பங்கேற்கும் தருணமிது. போக்குவரத்து மற்றும் தங்குமிடத்திற்கான ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. அன்புள்ள அருட்தந்தையர்கள் இந்நிகழ்வு வெற்றிபெற உங்கள் ஆதரவை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். லூர்து (திருவனந்தபுரம்) மற்றும் சங்கனாச்சேரி மறைமாவட்டத்தின் அம்பூரி மறைவட்ட அருட்தந்தையர்களையும் அருட்சகோதரிகளையும் அழைக்க முடிவு செய்துள்ளோம். அன்றைய தினம், நம்முடைய மறைமாவட்டத்தில் யூபிலியை முன்னிட்டு செயல்படுத்த இருக்கும் திட்டங்களின் தொடக்க விழாவும் நடைபெறும். இறைமக்கள் அனைவரும் ஆர்வத்துடன் பங்கேற்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

# சங்கமத்தில் தமிழக ஆயர்கள் கூட்டம்

தமிழக ஆயர் பேரவையின் (டிஎன்.பி.சி) அரையாண்டு கூட்டம் 2020 ஜனவரி 21–22 தேதிகளில் தக்கலை சங்கமத்தில் நடைபெறும். இந்த முக்கியமான நிகழ்வை நடத்துவது நமது மறைமாவட்டத்திற்கு ஒரு பெரிய ஆசீர்வாதம் ஆகும். தமிழ்நாட்டின் அனைத்து ஆயர்களும் சங்கமத்தில் தங்குவார்கள். உங்களுக்குத் தெரிந்தபடி, சங்கமத்தில் நமக்கு மிகக் குறைந்த வசதிகள் உள்ளன. இந்த நாட்களில் பேரருட்தந்தை தாமஸ் பவ்வத்துபறம்பில் அவர்கள் தலைமையில் அருட்தந்தையர்கள் மற்றும் அருட்சகோதரர்கள் அடங்கிய குழு, அறைகள், உள் அரங்கு, உணவு அறை மற்றும் பிற வசதிகளை தயார் செய்ய உழைத்து வருகிறார்கள். ஏற்பாட்டுக் குழுவில் நமக்கு 30 க்கும் மேற்பட்ட அருட்தந்தையர்கள் உள்ளனர். கூட்டத்திற்குத் தயாராகும் பொருட்டு அவை பல்வேறு துணைக்குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஆயர்களை வரவேற்கும் பொருட்டு அனைத்து அருட்தந்தையர்களும் ஜனவரி 21 ஆம் தேதி காலை 8.30 மணிக்கு சங்கத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். டிஎன்.பி.சி கூட்டம் தொடங்குவதற்கு முன்பு புதுப்பிக்கப்பட்ட உள் அரங்கும் மந்திரிக்கப்படும்.

# திருத்தொண்டர்.ஷிஜோ ஐக்கரகுந்நேலின் திருப்பட்ட அருட்பொழிவு

திருத்தொண்டர் செபாஸ்டியன் (ஷிஜோ ஜோஸ்) ஐக்கரகுந்நேல் 2019 டிசம்பர் 28 அன்று காலை 9.00 மணிக்கு ஞாறக்காடு புனித ஜோசப் தேவாலயத்தில் வைத்து குருவானராக அருட்பொழிவு செய்யப்பட்டார். நமது மறைமாவட்டத்தை சேர்ந்த ஏராளமான அருட்தந்தையர்கள் அருட்சகோதரிகள் மற்றும் பங்குமக்கள் இந்த விழாவில் பங்கேற்றனர். அருட்தந்தை. ஷிஜோ 2020 ஜனவரி 20 முதல் மறைமாவட்டத்தில் இருப்பார். நமது மறைமாவட்டக்கு அருட்தந்தையை பரிசாக வழங்கிய அவரது பெற்றோர் மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கு ஆயர் மனமார்ந்த நன்றியை தெரித்துவித்தனர்.

# BIRTHDAYS OF REV FATHERS

## BIRTH DAYS - JANUARY - 2020

| | |
|---|---|
| Fr. Ajin Jose | 17 |
| Fr. Saji Elembasserril | 17 |
| Fr. Luka Kollamparampil CMI | 17 |
| Fr. Toji Parambilparambil | 18 |
| Fr. Sanil Panthchirackal | 20 |
| Fr. Printo Kurias | 21 |
| Fr. Antony Chundelikkatt | 24 |
| Fr. Lijo Thekkel | 24 |
| Fr. Geo Choozhikunnel | 26 |
| Fr. Jomon Mangalamadom | 26 |

# FEASTDAYS OF REV FATHERS

## FEAST DAYS - JANUARY - 2020

| | |
|---|---|
| Fr. Sanil Panthichirackal | 03 |
| Fr. Johnsilal Arackaparampil | 03 |
| Fr. Davis Karukappally CMI | 20 |
| Fr. Justin Cheruvelil | 20 |
| Fr. Mijo Puthenpurayil | 20 |
| Fr. Robin Kurumullil | 20 |
| Fr. Seby Manimalakandathil | 20 |

## BISHOP'S ENGAGEMENTS January 2020

| DAT | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Wed | | Malayatoor: Funeral ceremony |
| 2 | Thu | 10.00 am | Bishop's House: Jubilee Core committee meeting |
| | | 04.00 pm | Curia meeting |
| 3 | Fri | 10.00 am | Bishop's House: Jubilee core committee meeting |
| | | 03.00 pm | Finance committee meeting |
| 4 | Sat | 02.30 pm | Kirathoor: School Day>>Changa-nassery |
| 5 | Sun | 10.00 am | Muttar: Blessing of Grotto & Holy Qurbana |
| 6 | Mon | 11.00 am | Kumarakam: Marriage Holy Qurbana |
| | | 04.00 pm | Kakkanad: Meeting with bishops of extended territory |
| 7 -15 | Tue- Wed | | Kakkanad: Syro Malabar Bishops Synod |
| 16 | Thu | 02.00pm | Madurai: Blessing of SABS convent |
| 17 | Fri | 11.00 am | Bishop`s House |
| 18 | Sat | 09.30 am | KKSS: Priests conference |
| | | 12.00 am | Bishop`s House: Visit of Fr. Clement Rocky and friends from Germany |
| | | 06.00 pm | Shenkottai visit |
| 19 | Sun | 09.30 am | Thickanamcode: Feast day Holy Qurbana |
| | | 03.00 pm | Visit of Fr. Shoji from Ireland |
| | | 05.00 pm | Kaliyal: New Forane inauguration and Holy Qurbana |

| | | | |
|---|---|---|---|
| 20-22 | Mon-Wed | | Sangamam: TNBC meetings |
| 21 | Tue | 05.30 pm | Nagercoil: Concelebrated Holy Qurbana by TNBC bishops |
| 23 | Thu | 10.00 am | Soosaipuram: College convocation day |
| 24 | Fri | 10.00 am | Soosaipuram: College annual day celebration |
| 25 | Sat | 05.00 pm | Amboori: Feast day Holy Qurbana |
| 26 | Sun | 04.30 pm | Varuthattu: First Holy communion Qurbana |
| 27 | Mon | 10.30 am | Marappadi: Marriage Holy Qurbana |
| 28 | Tue | | Bishop's House |
| 29 | Wed | 05.00 pm | Prayer day |
| 30 | Thu | | >> Bangalore |
| 31 | Fri | 10.30 am | Bangalore: KJC Feast Day Holy Qurbana>> Kochi: CMC Aluva |

Fr. Sajan Nettaponghu, Bishop's Secretary

## பாளயம்கோட்டை மறைமாவட்டத்திற்கான புதிய ஆயர்

திருத்தந்தை பிரான்சிஸ், தமிழ்நாட்டின் பாளயம்கோட்டை ஆயராக பேரருட்தந்தை அன்தோனிசாமி சவரிமுத்து (59) அவர்களை நியமித்துள்ளார். இந்த அறிவிப்பு 20 நவம்பர் 2019 புதன்கிழமை அறிவிக்கப்பட்டது. பேரருட்தந்தை அன்டோனிசாமி சவரிமுத்து புதிய ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டு 2019 டிசம்பர் 15, ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிக்கு பாளயம்கோட்டை புனித சேவியர் மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் பாளயம்கோட்டை வைத்து ஆயராக நியமிக்கப்பட்டார்.

## 2019 DECEMBER 19
## CHRISTMAS GATHERING, PRESBYTERIUM, SANGAMAM



## 2019 DECEMBER 20
## CHRISTMAS GATHERING BISHOP'S HOUSE NEIGHBOURS



## 2019 DECEMBER 21
## CHRISTMAS GATHERING WITH WELL WISHERS, SANGAMAM



## 2019 DECEMBER 21
## TCYM CHRISTMAS GATHERING- THETTIVILAI



## 2019 DECEMBER 22
## MINOR SEMINARY- CHRISTMAS GATHERING-MUKKUTTUKKAL



## 2019
## DECEMBER 21
## CRI
## CHRISTMAS
## GATHERING
## SOOSAIPURAM



**For Private Circulation Only**

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570